பா.ஜ.க. கூட்டணிக்கு பழனிசாமி பம்மியதற்கு மகன் மிதுனே சாட்சி!

இடி அமின் ஆட்சியை நடத்திவிட்டு இம்சை அரசன் போல உளறிக் கொட்டுகிறார் பழனிசாமி!

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, மே.1-

எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்து அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சட்டம் ஒழுங்கு குறித்து சட்டமன்றத்தில் 'பச்சைப் பொய்' பழனிசாமி சொன்ன பொய் குற்றச்சாட்டுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புள்ளிவிவரங்களுடன் தோலுரித்தார்.

பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி! துயரங்களைக் கொடுக்கக்கூடிய ஆட்சிக்கு தூத்துக்குடி துப்பாக்கிச் சூடே சாட்சி! அவமான ஆட்சிக்கு அதிமுக ஆட்சியே சாட்சி! என அடிமை அ.தி.மு.க.வின் அவல ஆட்சியைப் பற்றி முதலமைச்சர் சொன்ன உண்மைகளுக்கு பதில் சொல்ல திராணி இல்லாமல் பழனிசாமி வழக்கம் போலவே தி.மு.க.வை வசைபாட கிளம்பியிருக்கிறார்.

கரப்ஷன் ஆட்சியை நடத்திய பழனிசாமி, அடுத்த வெர்ஷன் பற்றியெல்லாம் பேசலாமா? பா.ஜ.க. கூட்டணியில் சேர்ந்த போதே அதிமுகவின் வெர்ஷன் முடிந்து விட்டது. கூட்டணி ஆட்சி

என்று சொன்ன போதே பழனிசாமியின் அரசியல் அத்தியாயம் முடிவுக்கு வந்துவிட்டது. அவரது குடும்பமே முடிவுரை எழுதிவிட்டது. பாஜக கூட்டணிக்கு பழனிசாமி பம்மியதற்கு மகன் மிதுனே சாட்சி!

தேர்தலுக்கு முன்பே மக்கள் தங்களுக்கு அளிக்கப் போகும் படுதோல்வியை மறைக்க விரக்தியில், கேலிக்கூத்துக்களை செய்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

அடிமை ஆட்சிக்கு அ.தி.மு.க.வே சாட்சி. அதற்கு மக்கள் தொடர்ச்சியாக அ.தி.மு.க. வுக்கு பரிசளித்த பத்து தோல்விகளே சாட்சி! தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கும் பா.ஜ.க.வின் காலடியில் வீழ்ந்துக் கிடந்து அடிமை அரசியல் செய்து வரும் பழனிசாமியை 2026 தேர்தலில் மக்கள் தோற்கடித்து ஓட வைக்கப் போவது உறுதி!

தமிழ்நாட்டை ஆதிக்கம் செய்ய நினைக்கும் பா.ஜ.க. விற்கும், அதன் அடிமை அதிமுகவிற்கும் தமிழ்நாட்டு மக்கள் 2026-லும் 'Getout' சொல்லப்போவது உறுதி! இப்போது இருக்கிற 66 அ.தி.மு.க. எம்.எல்.ஏ-கள் எண்ணிக்கையில் 2026-ல் 6 கூட கிடைக்காது.

திராவிட மாடல் 2.0, அமையப் போகும் வயிற்றெரிச்சலில் பழனிசாமி செய்யும் இந்த கோமாளிக்கூத்துகளைப் பார்த்தால், பரிதாபம்தான் வருகிறது.

'அதிமுக ஆட்சியில் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நின்றது' என சொல்லியிருக்கிறார் பழனிசாமி. சிறப்பான ஆட்சி நடத்தி இருந்தால், தொடர்ந்து 10 தேர்தல்களில் ஏன் அ.தி.மு.க. தோற்றது? இடி அமின் ஆட்சியை நடத்திவிட்டு இம்சை அரசன் போல உளறி கொட்டிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

தூத்துக்குடி துப்பாக்கி சூட்டில் மக்களின் ரத்தம் குடித்த ஆட்சி, பழனிசாமியின் ஆட்சி.

"அண்ணா பெல்ட்டால அடிக்காதீங்கணா..." என அப்பாவி இளம் பெண்கள் கதறல் கேட்டால், அது பழனிசாமி ஆட்சிக்கு சாட்சி!

நீட் உள்பட பல்வேறு மாநில உரிமைகளை சுயநலத்துக்காக டெல்லியிடம் அடகு வைத்த அரசுக்கு பழனிசாமியே சாட்சி!

தலைவி வாழ்ந்த பங்களாவில் கொலை, கொள்ளை நடந்த ஆட்சிக்கு கொடநாடே சாட்சி!

அப்பாவையும் மகனையும் அடித்து கொன்றதற்கு சாத்தான்குளமே சாட்சி!

இப்படி பழனிசாமி ஆட்சியில் நடந்த அவலங்களையும் அக்கப்போர்களையும் எப்படி மறக்க முடியும். தமிழ்நாட்டு வரலாற்றில் பழனிசாமியின் நான்கரை ஆண்டு காலம் இருண்டகாலமாகதான் இருந்தது. அரசியலின் கரும்புள்ளி நீங்கள். இனி எந்த காலத்திலும் தமிழ்நாட்டில் ஆட்சியை மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்களின் மனங்களையும் பிடிக்கவே முடியாது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காவல்துறை, தீயணைப்புத்துறை மானியக் கோரிக்கைகளுக்கு சிறப்பான முறையில் பதிலளித்துப் பேசிய

முதல்வருக்கு - பல்வேறு கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்து!

சட்டப்பேரவையில் தெரிவித்தனர்!

சென்னை, மே.1-

சட்டமன்றக் கூட்டத்தொடரின் இறுதி நாளான நேற்று முன்தினம் (29.4.2025) காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளின் போது சிறப்பான முறையில் பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் உதயகுமார், எதிர்க்கட்சி கொறடா வேலுமணி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் ராஜேஷ் குமார், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் கோ.க. மணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் சிந்தனைச்செல்வன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள், கொங்கு தேசிய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜவஹிருல்லா, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஒன்றியப் பிரிப்பு அறிக்கையில் திருத்தம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

மதுரை தெற்கு மாவட்டம்

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட மதுரை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேடப்பட்டி தெற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **பூசலபுரம் ஊராட்சி, திருமங்கலம் தெற்கு ஒன்றியத்தில்** செயல்படும்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குருந்தன்கோடு மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **தென்கரை ஊராட்சி கன்னியாகுமரி மேற்கு மாவட்டம், தக்கலை வடக்கு ஒன்றியத்தில்** செயல்படும்.

"அண்ணா அறிவாலயம்",
சென்னை - 18
நாள்- 29.04.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர், தி.மு.க.

ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு 225 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனை வளாகம் கட்ட வேண்டும்!

கடப்பாறை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டித்தாரீர்!

சட்டப் பேரவையில் – பர்கூர் தே.மதியழகன் கோரிக்கை!

சென்னை,மே.1-

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பர்கூர் தொகுதி கழக உறுப்பினர் தே.மதியழகன், "ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு 225 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை வளாகம் கட்ட வேண்டும்" என்றும், கடப்பாறை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டித்தாரீர்! என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:

நீதியின்பால் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவையை நடத்திக்கொண்டிருக்கும் தங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழன் என்றோர் இனமுண்டு!

தனியே அவர்கொரு குணமுண்டு!

என்கிற வார்த்தைகளுக்கு அடையாளமாக தனது சாதனைகளால் உலகைத்தையே திரும்பி பார்க்க வைத்துக்கொண்டிருக்கும் தமிழர்களின் தலைமகன், இணையில்லா திருமகன், விடியல் தந்த உதய சூரியன், சமூக சீர்திருத்தத்தின் பெருமகன், வீரத் தமிழன்னையே வியந்து பார்க்கும் மன்னாதி மன்னன், அனைவருக்கும் அனைத்தையும் கொடுத்து மகிழும் திராவிட நாயகர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களை, தலைவணங்கி என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சேர சோழ பாண்டியர்களான மூவேந்தர்களின் ஆட்சியின் சிறப்பு மற்றும் வீரம் வரலாற்றிலுள்ளது. அந்த வரலாறே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் ஒற்றை வேந்தனாய் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. ஆம், தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல; சமூக நீதியின் வரலாற்றிலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலகட்டம் என்றால் அது இன்றைய தளபதியாரின் பொற்கால திராவிட மாடல் ஆட்சியே என்பதை இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் வரலாறு கூறிக்கொண்டே இருக்கும். அதற்கு சாட்சியாக ஏழை எளிய ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களுக்கு உயர் தர மேற்படிப்புகள் என்றாலே எட்டாக்கனி என்றிருந்த நிலையை மாற்றி புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் என அனைவரும் சமநிலையில் உயர் கல்வி கற்பது மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் வெளி நாடு சென்று மேற்படிப்பு பயிலும் வகையில் புதுமையான திட்டங்களைப் புகுத்தி, இதுவரை இல்லாத அளவிற்கு கல்வி துறைக்கு அதிக அளவிலான நிதி ஒதுக்கீடு, மருத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம், வேளாண்மைத் துறையில் அதிக கவனம் என முக்கிய துறைகளில் பார்போற்றும் வளர்ச்சியை உருவாக்கி,

இந்தியாவிலே அதிவேக வளர்ச்சி கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டிய, கோடானுகோடி தமிழ் மக்களின் மனங்களில் வாழும் அன்பின் அடையாளம், தமிழ் மக்களின் எல்லைச்சாமி, சோழ நாடு கொடுத்த கொடை வள்ளல் தளபதியார் அவர்களை மீண்டும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

ஒருசேர அனைத்து மக்களையும் முன்னேற்றும் வகையில் மகளிர் நலன், பெண்களுக்கான சுயதொழில், கடனுதவி, உள்கட்டமைப்பு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, பசுமைப் பயணம், தமிழர் பண்பாடு, அறிவு சார் பொருளாதரம் என ஒவ்வொரு துறைக்கும் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்து, ஒட்டுமொத்த தமிழகத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை இந்த நிதி நிலை அறிக்கை உறுதி செய்துள்ளது. இது இந்திய மாநிலங்களிலேயே மிகச் சிறந்த பட்ஜெட் என அனைவராலும் பாராட்டைப் பெற்ற பட்ஜெட் என்றால் அது மிகையல்ல.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு 2025-2026 ஆம் நிதியாண்டில் ரூ.1,563 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கல்வி, வேலைவாய்ப்பு, உள்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவுதுடன், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழகத்தின் ஒதுக்கீடு அதிகமாக உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்!

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.5 இலட்சம் கோடி கடன் உதவி வழங்கப்படுவதன்மூலம், பிற்படுத்தப்பட் டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் சமூகத் தினருக்கு தொழில்முனைவு வாய்ப்புகள் ஊக்குவிக்கப்படும். அரசு விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உணவுக் கட்டணம் பள்ளி விடுதிக்கு ரூ.1,000/-லிருந்து ரூ.1,400/- ஆகவும், கல்லூரி விடுதிக்கு ரூ.1,100/-லிருந்து ரூ.1,500/- ஆகவும் உயர்த்தப்பட்டு, சத்தான உணவு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதேபோ.ல ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., என்.ஐ.டி. மற்றும் மத்தியப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் வரை வழங்கும் சிறப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. கல்லூரி காலத்திற்குப் பிறகு திறன் மேம்பாட்டு பயிற்சிமூலம்

இளைஞர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்காக புதிய விடுதிகள் அமைத்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள விடுதிகளின் உட்கட்டமைப்புகள் மேம்படுத்துதல், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நவீன வசதிகள் செய்தல் மற்றும் கணினி ஆய்வகங்கள் அமைத்தல் என எண்ணற்ற திட்டங்களை இந்த பட்ஜெட் வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, சிறுபான்மையினருக்கு தனித் தனி வாரியங்கள் அமைத்தல், அவர்களின் முன்னேற்றத்திற்காக சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்துதல், உதவிகள் வழங்குதல் என இந்தியாவிலேயே சிறுபான்மை யினர் நலன் காக்கும் முதன்மை யான அரசாக தமிழ்நாடு அரசு விளங்கி வருகிறது. உலமாக்களுக்கு ஓய்வூதியம், ஜெருசலேம் மற்றும் ஹஜ் யாத்திரைகளுக்கு நிதி உதவி, கிறிஸ்தவ தேவாலயங்களின் பழுது மற்றும் புனரமைப்பிற்கு நிதி என மற்ற மாநிலங்களுக்கு முன்னுதா ரணமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது என்பதை பெருமையோடு கூறிக்கொள்கின்றேன்.

முதல்வர் தளபதியாரின் நிர்வாகத் திறமையால், தமிழ்நாட்டின் பொருளாதரம் ஒரு டிரில்லியன் இலக்கை நோக்கி வேகமாக முன்னேறி வருவதால், தொழில் முதலீடுகளும் அதிகரித்து வருகின்றன. இதற்கேற்ப, தொழில் துறைக்கு தேவை யான திறன் படைத்த மனித வளத்தை உருவாக்குவது நமது கடமையாகிறது. உதாரணத்திற்கு, இந்திய சுதந்திரத்தின்போது தமிழ்நாடு மற்றும் பீகாரின் மக்கள்தொகை சமமாக இருந்தது. தற்போது தமிழ்நாட்டின் மக்கள் தொகை 8 கோடியாகவும், பீகாரின் மக்கள் தொகை 13.5 கோடியாகயும் உள்ளது. ஆகையினால், மனித வளத் தேவைக்கு பிற மாநிலங்களைச் சார்ந்து இருக்க வேண்டியதாக உள்ளது. தமிழகத்தின் எதிர்கால நலனையும், தொகுதி மறுசீரமைப்பு போன்ற விவகாரங்க ளுக்கும் தீர்வு காணும் வகையில், இரண்டு குழந்தைகள் போதும் என்ற கொள்கையை மாற்றி, மூன்றாவது குழந்தைக்கு அதிக சலுகைகள் அறிவித்து ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை அவை முன் சமர்பிக்கிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பர்கூர் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றுக்கு புதிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்ற தொகுதியை மேம்படுத்த முதலமைச்சர் தளபதியாரின் கருணையாலும், துணை முதல்வரின் துணையாலும் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பர்கூரை சிறப்பு நிலை பேரூராட்சியாக தரமுயர்த்தியது;

புதிய பேருந்து நிலையம் அமைக்க ஒப்புதல்; கல்வி அறிவு மையம் அமைக்க ஒப்புதல்; சந்தையினை புதுப்பித்தல், வீடு தோறும் குடிநீர், சாலை வசதிகளுக்கு நிதி; மினி விளையாட்டு மைதானம் அமைக்க ஒப்புதல் மற்றும் நீர்வளத் துறை அமைச்சரின் பரிந்துரையின் பேரில் தென்பெண்ணை ஆற்று உபரி நீரை பாடதலா எரி, அச்சமங்கலம் எரி, கப்பல்வாடி எரி மற்றும் குட்டூர் எரி வழியாக காக்கங்கரை வரை கால்வாய் மூலம் 14 ஏரிகளுக்கு நீர் வழங்கும் விரிவான திட்டத்திற்கு ரூ.45 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு சாத்தியக்கூறு அறிக்கை பெற்று, இந்நிதியாண்டிலே அனைத்து திட்டங்களையும் செயல்படுத்த வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே புதிய அணை!

போச்சம்பள்ளி வட்டம், சாந்தனூர் எரி முதல் கொட்டாவூர் எரி வரை கால்வாய் அமைத்து ஏரிக்கு நீர் வழங்குதல்; போச்சம்பள்ளி வட்டம், செல்லக்குட்டப்பட்டி கிராமம் அருகே தென் பெண்ணையாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு கட்டி, திப்பனாங்குட்டை ஏரிக்கு நீர் வழங்குதல் மற்றும் போச்சம்பள்ளி பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும் என மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. மேலும், போச்சம்பள்ளி தலைமையிடமாகக் கொண்டு, புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்ற இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றி தரும்படி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி நகரட்சியானது 1 இலட்சம் மக்கள் தொகை அடர்த்தி கொண்ட நகரமாக இருந்து வருகிறது. கிருஷ்ணகிரி தலைமை மருத்துவமனை தர முயர்த்தப்பட்டு, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக 14 கிலோ மீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. உள் நோயாளியாக அனுமதி, அவசர சிகிச்சை கள், இரவு நேரங்களில் அவசரச் சிகிச்சைகள் போன்ற மருத்துவ வசதிகள் பெற பொது மக்கள் மற்றும் நோயாளிகள் 14 கிலோ மீட்டர் தொலைவிற்குச் செல்ல வேண்டியுள்ளது. வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மருந்துவ கல்லூரிகள் அமைக்கபட்ட பின்னர், பழைய வளாகத்தில் தாலுக்கா அளவிலான மருத்துவமனைகள் அமைக்கபட்டு, செயல்பட்டு வருகின்றன. எனவே, அதே மாதிரி கிருஷ்ணகிரி நகர் பகுதியிலும் 100 படுக்கைகள் கொண்ட தாலுக்கா அளவிலான மருத்துவ மனை அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கி ன்றோம்.

கிருஷ்ணகிரி அணையானது மறைந்த தமிழக முதல்வர் காமராஜர் காலத்தில் 1958 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இந்த அணை கட்டப்பட்டதால், அதன் நீர்பிடிப்பு பகுதியில் வசித்த கிராம மக்கள் அணையின் அருகில் மேற்புறம் இருந்த நிலங்களில் குடியேறி விவசாயம் செய்து வந்தனர். சோக்காடி, ஜம்பூத்து, கெடி வெங்கட்ராமன் கோயில், குள்ளன் கொட்டாய், கருத்தமாரம்பட்டி ஆகிய பகுதிகளில் சுமார் 70 ஆண்டுகள் பட்டா இல்லாமல் வசித்து வந்துள்ளனர். இந்நிலையில், தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிகயினை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு விரைவில் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) கிருஷ்ண கிரி, கட்டிக்காகனபள்ளி ஊராட்சியானது, நகராட்சியில் இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அமைந்துள்ள 1 & 2nd Phase - வீட்டு வசதி வாரிய குடியிருப்புவாசி மக்களுக்கு சீரான கழிவுநீர் கால்வாய், முறையான சாலை வசதி இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, அவர்களுக்கு கழிவுநீர் கால்வாய் மற்றும் சாலை வசதி அமைக்க வேண்டுமென கோரிக்கை வைக்கின்றேன். கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட A, B, C, D ஆகிய நான்கு வார்டுகளில் 4,621 குடும்பங்கள் சுமார் 30 ஆண்டு காலமாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அவர்களது நிலமானது அடங்கல் கலத்தில் பட்டாதாரர் பெயரில் தாக்கல் ஆகி கணினிமயமாக்கும்பொழுது, சர்க்கார் புறம்போக்கு எனத் தவறுதலாக பதிவாகியுள்ளது. இதனை ரயத்துவாரி பட்டாவாக மாற்றி வகைபாடு செய்ய ஆவன செய்யும்பட்சத்தில் 4,621 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நீண்ட நாள் கோரிக்கையினை விரைவில் ஆவன செய்ய மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு 2022-23-ஆம் ஆண்டில் 50 படுக்கைகள் கொண்ட CCB-Critical Care Block கட்ட ஒதுக்கப்பட்டது. அப்பணியானது அரசு மருத்துவமனை தேன்கனிக்கோட்டைக்கு மாற்றி தரப்பட்டது. இந்த நிதியாண்டில் PMIVK திட்டத்தின்கீழ் 225 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை கட்டட வளாகம் கட்டுவதற்கு விரைவில் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இது நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல நீதியான அறிக்கை, பல கோடி தமிழக மக்கள், மாற்றுத் திறனாளி கள் மற்றும் திருநங்கை, நம்பிகளின் மனங்களை வென்ற வெள்ளைய றிக்கை.

"எல்லார்க்கும் எல்லாம்" என்பதை தனது ஆட்சியின் இலக்காகவும் கொள்கையாகவும் கொண்டு செயல்பட்டு வரும் திராவிட மாடலின் தன்னிகரில்லா தலைவர் முதல்வர் தளபதியார் அவர்களை, மீண்டும் 2026-ல் முதல்வராக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கையின்றி சுயநலத்திற்காக கைகோர்க்கும் அடிமை கூட்டத்தை தூக்கி யெறிந்து உலகம் போற்றும் பொற்கால ஆட்சியை, எவருக்கும் தலைவணங்கிடாத தனித்துவமான தமிழகத்தின் வளர்ச்சிப் பாதையை தளபதியரால் மட்டுமே வழங்க முடியும் என்பதனை தமிழக மக்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டார்கள் என்பதற்கு சான்றே முதல்வர் அவர்கள் செல்லும் இடமெல்லாம் கடல் அலைபோல் கூடும் எழுச்சியான மக்கள் கூட்டம் என்பதனை கூறி, 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை பெருமையுடன் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி இடம் அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

சிங்காரப்பேட்டை ஊராட்சி ஜவ்வாது மலையின் அடிவாரத்தில் அருகே ஓடும் கடப்பாறை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

தீண்டாமையின் அடையாளமான 'காலனி' என்ற சொல்லை நீக்கிய

'திராவிட மாடல்' முதல்வருக்கு நன்றிகள் - பாராட்டுகள்!

த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் அறிக்கை!

கோவை, மே.1-

தீண்டாமையின் அடையாளமான 'காலனி' என்ற சொல்லை நீக்கிய திராவிட மாடல் முதல்வருக்கு நன்றி தெரிவித்து த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை. கு.இராமகிருட்டிணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.4.2025) சிறப்பு வாய்ந்த ஓர் அறிவிப்பை செய்திருக்கிறார்.

காலம் காலமாக சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களை வைத்து சமூகத்தில் அவர்களை இழிவாக நடத்துகிற தன்மையை ஒழிக்கின்ற வகையில் இனிமேல் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழுகின்ற குடியிருப்பு பகுதிகளை காலனி என்று அழைக்கக்கூடாது.

அதேபோல் அரசு ஆவணங்களிலும் இனிமேல் காலனி என்ற வார்த்தை இடம்பெறாது என்று அறிவித்திருக்கிறார். தந்தை பெரியாரும் அம்பேத்கரும் விரும்பிய சாதியற்ற சமூகத்தை அமைப்பதற்கு இந்த அறிவிப்பு ஒரு மைல் கல்லாக அமையும்.

சுயமரியாதை உரிமைகளையும், தீண்டாமை ஒழிப்பில் திராவிட மாடல் அரசு ஆளுகின்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு தந்தை பெரியார் திராவிடர் கழகம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் , இராசிபுரத்தில் கோடை வெப்பம் தணிக்க அமைக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தலை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி, இளநீர், தேங்காய், வெள்ளரி, முலாம் பழம், நீர் மோர்,உள்ளிட்டவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் என்.ஆர்.சங்கர், நகர் மன்றத் தலைவர் கவிதா சங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், துணை அமைப்பாளர் மா.கார்த்திக் மற்றும் நகர கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் வழங்கிய உறுதிமொழியை வாசித்து அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.